**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4684

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 14.10.2021

Accepted: 24.12.2021

Published: 01.01.2022

Citation:
Krishnamurthy, S. "Revolutionary Elements in Bharathidasan Songs." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 186–93.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4684

*Corresponding Author:
krishnamoorthysvga04@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Revolutionary Elements in Bharathidasan Songs

**Dr. S. Krishnamurthy**
*Assistant Professor, Tamil Department*
*Mannar Duraisingam Government Arts College*
*Sivagangai, Tamil Nadu, India*
http://orcid.org/0000-0003-1485-6478

**Abstract -** The revolutionary poet Bharathidasan is notable among the unparalleled Tamil poets of the twentieth century. Many contributions were made for the liberation of India. His songs of liberation caused a stir among the natives. Aware of his contemporary social status, Bharathidasan was passionate about the need for Tamils to excel on the world stage. Bharathidasan can be described as a social activist who set out to eradicate the superstitions and social ills that pervaded his contemporary Tamil community in his songs. Bharathidasan is proud to be the first Tamil poet to have given voice to songs for the betterment of women and advancement in life. The purpose of this article is to explore the ideas of revolutionary elements found in the various songs of Bharathidasan, who was a firm believer that the country would prosper only if women progressed.

**Keywords:** Tamil Moden Poems, Bharathidasan, Poems, Azhakin Sirippu, Kudumba Vilakku, Puratchi Kavinjar

**References**

1. Bharathidasan. 2016. *Bharathidasan Poems*, Chennai, Swamimalai Pathipagam, Fifth Edition.
2. Bharathidasan, *Azhakin Sirippu*, Chennai, Senthamizh Nilayam.
3. ............., 1967. *Isaiamuthu*, Chennai, Parry Nilayam.
4. ..............., 1965. *Irunda Veedu*. Chennai, Parry Nilayam.
5. .............., 1969. *Ethirparatha Mutham*, Chennai, Senthamizh Nilayiam.
6. .............., 1962. *Kannaki Puratchi Kapiyam*, Chennai, Anbu Noolagam.
7. ..............., 1966. *Kudumba Vilakku*, Chennai, Parry Nilayam.

# பாரதிதாசன் பாடல்களில் புரட்சிக் கூறுகள்

***முனைவர் சு. கிருஷ்ணமூர்த்தி***
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி
சிவகங்கை

***ஆய்வுச் சுருக்கம்***

*இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்க் கவிஞர்களுள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் குறிப்பிடத்தக்கவர். இந்திய விடுதலைக்காக ஆற்றிய அரும்பணிகள் பலவாகும். அவர்தம் விடுதலை வேட்கைப் பாடல்கள் நாட்டுமக்களிடையே உணர்ச்சியலைகளை ஏற்படுத்தின. தம் சமகாலச் சமூக நிலையை நன்குணர்ந்திருந்த பாரதிதாசன், தமிழர்கள் உலக அரங்கில் உன்னதமான நிலையை அடைந்திட வேண்டும் என்பதில் பெருவிருப்புக் கொண்டவராக இருந்துள்ளார். தம் சமகாலத் தமிழ்ச் சமூகத்தில் புரையோடிப்போயிருந்த மூடநம்பிக்கைகளையும் சமூக அவலங்களையும் தம் பாடல்களில் பதிவுசெய்து, அவற்றை அடியோடு அகற்றிட அரும்பாடுபட்ட சமூகப் போராளியாகப் பாரதிதாசனைக் குறிப்பிடலாம். மகளிர் நலம்பெறவும், வாழ்க்கையில் முன்னேற்றம் அடைந்திட பாடல்கள் வாயிலாகக் குரல் கொடுத்த முதல் தமிழ்க்கவிஞன் என்ற பெருமை பாரதிதாசனுக்கு உண்டு. மகளிர் முன்னேற்றம் அடைந்திட்டால் மட்டுமே நாடு முன்னேற்றமடையும் என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்த பாரதிதாசனின் பல்வேறு பாடல்களில் காணலாகும் புரட்சிக் கூறுகள் குறித்த சிந்தனைகளை ஆய்ந்தறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***முக்கியச் சொற்கள்:*** *பாரதிதாசன் கவிதைகள், அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு, புரட்சிக் கவிஞர்.*

## முன்னுரை

புரட்சிக் கவிஞர் என்றாலே இந்த நூற்றாண்டிலும் இதற்கு முந்திய நூற்றாண்டிலும் வேறு யாரையும் குறிக்காமல், பாரதிதாசன் தமிழிலக்கிய வரலாற்றிலே சிறப்பிடம் பெற்றுவிட்டார். சிறந்ததை மிகமிக விரும்பிப் போற்றுதலும், தீயதை மிகமிக வெறுத்துத் தூற்றுதலும் அவர் இயல்பு. சமுதாயத்தில் இடம்பெற்றுவிட்ட தீய பழக்க வழக்கங்களையும் மூடக் கருத்துக்களையும் கடிந்து பாடி, படிப்பவர் உள்ளத்தில் புத்துணர்ச்சியை எழுப்பிய புரட்சியாளர் என்று அவரது படைப்புக்கள் உறுதிசெய்கின்றன.

சமுதாயத்தில் அடிப்படை மாற்றமான புரட்சி ஏற்படுவதற்கு எழுத்தாளர் பலரின் எண்ணங்களை காரணமாக இருந்திருக்கின்றன. சமுதாயத்தை ஊடுருவிப் பார்க்கும் தன்னாற்றல் வாய்ந்த கவிஞன், தன்னுடைய பாடல்களில் குறிக்கோளையும் கோட்பாட்டையும் உலவ விடுகிறான். பாரதிதாசன் சமுதாயத்தைக் கூறுபோட்டு நோக்கியவர், ஆதலால் இவருடைய எண்ணங்கள் சிந்தனையைத் தூண்டிவிடும் எழுச்சி கொண்டு எதற்கும் காரணம் தேடும் இயல்போடு பாடல்களில் உருப்பெற்றன. அவ்வடிப்படையில் பாரதிதாசன் பாடல்களில் இடம்பெற்றுள்ள புரட்சிக்கூறுகள் பற்றி ஆய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

## சமயம்

சமுதாயப் புரட்சியில் ஈடுபடுவோர் முதலில் சமயத்தையே தாக்குவர். மக்களிடம் ஊறிப்போயிருக்கும் பழைய நம்பிக்கைகள், சமய உணர்வின் வழியாகவே காப்பாற்றப்படுகின்றன.

எனவே லெனின் முதலான புரட்சியாளர் சமய உணர்ச்சியை ஒழிக்க முயன்றதாக வரலாறும், சமயம் மக்களுக்கு அபின் போன்றதாகும் என்னும் அவருடைய கூற்றும் காட்டுகின்றன. சமுதாயப் புரட்சியை விரம்பிய பாரதிதாசனுக்கு லெனினுடைய இச்சொற்கள் தாரகமந்திரமாக அமைந்துவிட்டன. "மதமும் சாஸ்திரங்களும் மனிதனின் அறிவையும் சுதந்திரத்தையும் ஒழிப்பதற்கென்றே, மக்களை மடையர்களாகவும் அடிமைகளாகவும் ஆக்குவதற்கென்றே ஏற்பட்ட, ஏற்படுத்தப்பட்ட சாதனங்களாகும்" என்பது போன்ற பெரியார் ஈ.வெ.ரா.வின் எண்ணங்கள் கவிஞரின் சமய ஒழிப்புணர்ச்சிக்கத் தூண்டுகோல்கள் ஆயின.

பாரதியாரின் வாழ்த்தைப் பெற்றுக் கவிதை உலகில் வலம்வந்த பாரதிதாசன் தம்முடைய நோக்கத்தில் அவருக்கு முற்றிலும் மாறானவர். பாரதியாருக்கு நாட்டு விடுதலையிலிருந்த அக்கறை இவருக்குச் சமுதாய விடுதலையிலிருந்தது. பாரதியார் பழமையைச் செப்பனிட விரும்பியபோது, இவர் புதியதைப் படைக்கவே விழைந்தார். பழையகேடுகளைக்களைந்தெறிவதில்தான் குறியாக இருந்தார். சமுதாயத்தில் சமயம் ஓர் அமைப்பாக இயங்குவதை எதிர்த்து, மனித வாழ்வில் அதற்குத் தேவையே இல்லை என்றும், ஒழிக்கப்பட வேண்டிய ஒன்று அது என்றும் இறுதிவரையில் உறுதியாக இயம்பிவந்தார்.

**"மூடத் தனத்தை முடுக்கும் மதத்தைநிர்**
**மூலப் படுத்தக்கை ஓங்குவீர்"**[1]
**"தொல்லுலகில் மனிதர்க்கு மதம்தேவை இல்லையே"**[2]
**"சமயப் பிணக்கெனும் சழக்கும் இல்லை"**[3]
**"ஒருமதமும் வேண்டாம் – தம்பி**
**உண்மை உடையார்க்கே"**[4]

என மேற்கண்டவாறும், வேறுபல இடங்களிலும் சமயம் வேண்டாம் எனக் குறிப்பிடுவதைக் காணமுடிகின்றது.

கல்லிலும் செம்பிலும் உருவம் பொறித்துக் கடவுள் என நாட்டில் வழங்குவர். அந்தக் கல்லையும் செம்பையும் கைதொழுது வணங்குவது தமிழ்க் கொள்கை அல்ல, அறத்தை நாடுவதும், அதன் திறத்தைப் பாடுவதும் தான் தமிழ்க் கொள்கை என்கிறார். எனவே மதம் எனல் தமிழ் வையத்தின் பகை என்றும்,

**"சாதிமதம் தமிழ் இல்லை – அந்தச்**
**சாதிமதத் தைத்தமிழ் கொள்வது மில்லை"**[5]
**"கேட்டுக்குத் தெய்வமென் றேபேர் – அதைக்**
**கெஞ்சல் இறைஞ்சல் தமிழ்க்கொள்கை இல்லை**
**ஈசனென் றேஒன்றைக் கூறி – இடர்**
**ஏற்பதை நம்தமிழ் ஏற்பதும் இல்லை"**[6]

என்றும் தமிழ்க்கொள்கையை எடுத்துக் காட்டுகிறார் கவிஞர். "சங்க இலக்கியத்தில் சில பாடல்கள் அளவிலேயே சமய உணர்வு வெளிப்படுகிறது என்று கூறுகிறார்.

சமுதாயத்தின் பொது ஒழுக்கத்தைக் குலைப்பது மதத்தின் வேலையாக இருந்து வருகின்றது. இந்து சமயக் கதைகளில் வரும் கடவுளர் எல்லாம் வரைமுறையில்லா ஒழுக்கக் கேடர்களாக விளங்குகின்றனர் என்ற கருத்துடையவர் கவிஞர். கிருட்டிணன் என்ற கடவுளுக்கு ருக்மணி, பாமை என இரண்டு மனைவியர், இரண்டு மனைவியர் போதாமல் பல பெண்களைக் கற்பழித்து இன்பம் நுகர்ந்தவன். எனவே மதம் வளர்ந்தால் பகுத்தறிவு பாழாகிவிடும் என எச்சரிக்கிறார்.

**"மதம் என்ற கருங்கற் பாங்கில்**
**மல்லிகை பூப்ப தில்லை!**
**மதியினில் மயக்கம் என்ற**
**நஞ்சொன்றே மலரும், நாட்டில்**
**புதியதோர் பொல்லாங் கென்னும்**
**எரிமலை புகையும்! மக்கள்**
**இதுநலம் இதுதீ தென்னும்**
**எண்ணமும் இழந்து போவார்"**[7]

என்பதில் மதத்தின் கேடுகளைப் புலப்படுத்துகிறார். இந்தியச் சமுதாய அமைப்பில் மதத்தின் எல்லைகளைக் கட்டுப்படுத்து வது பெரும்பாடாக இருக்கிறது. அரசியல், மதத்திற்கு ஆதரவாக இருக்கும் வரை, மதத்தை அடியோடு சமுதாயத்திலிருந்து அகற்றுவது என்பது ஆகாத செயல்!,

**"முப்பத்து முக்கோடி மக்களினால் பெற்ற பேறு – இங்கு**
**மூச்சு விடக்கூட மார்க்கமில் லாமதச் சேறு – மண்ணில்**
**எப்பக்கங் காணினும் இன்பத்தி லேறுமுன் னேற்றம் – இங்கு**
**ஈன மதப்பலி பீடத்தி லேமுடை நாற்றம்"[8]**

**"மூர்க்கமாய் வளர்ந்திடும் மூடவழக்கக் காடு**
**மொய்க்கும் ஆத்திகன் வீடு முடைநாற்றச் சுடுகாடு"[9]**

எனத் தமது சமுதாயத்தை நொந்து கொள்கிறார். "இனி ஒரு மதத்துக்கு ஆட்பட்டிரேன்" என்ற உறுதியை ஏற்குமாறு அறைகூவி அழைக்கின்றார்.

## சாதி

சாதி தோன்றியதற்குச் சில மதக்கொள்கைகளே காரணம் என்று அம்பேத்கார் கருதுகிறார். சமயத்தின் சமுதாய வெளிப்பாடே சாதி என்பது கோசாம்பி என்பவர் கருத்து. மதமே வாழ்க்கையாகக் கொண்டிருந்த ஆரியர் வந்த பிறகுதான் தமிழ்நாட்டில் சாதி தோன்றியது. சாதி என்ற சொல்லே தமிழ் ஆகாது எனக் குறிக்கிறார் பாரதிதாசன். சாதி என்ற சொல்லும் முறையும் தமிழ் அல்ல என்பதை,

**"நால்வகுப்பு என்பது நூல்வகுப்பா தமிழ்நாட்டில்**
**நற்றமிழ் மக்கள் ஒரே வகுப்பே தமிழ் ஏட்டில்**
**நமது கொள்கை மக்களெ லாம்நிகர்**
**மிக்குயர்ந்த சாதிகீழ்ச் சாதி என்னும்**
**வேற்றுமைகள் தமிழ்க்கில்லை தமிழர்க் கில்லை**
**ஒன்றே அலால் குல மில்லை**
**என்றதோர் தமிழரின் சொல்லை**
**சாதிமதம் தமிழ் இல்லை – அந்தச்**
**சாதி மதத்தைத் தமிழ்கொள்வ தில்லை"[10]**

என்ற அடிகளால் உணரலாம். தமிழுக்கு உரியதல்லாத இச்சாதிமுறை ஆரியரால் தமிழகத்திற்கு வருகை புரிந்தது என்பதை, "இடைவந்த சாதி எனும் இடர், அழகிய நாட்டில் அந்நாள் இல்லாத சாதியும், இந்நாட்டில் பிறரால் இறக்குமதி பெற்ற சாதி" நான்கு சாதிகள் ஆரியர் கொள்கையே, பொய்க்கூற்றே சாதி எனல், ஆரியர் சொல் எனப் பல இடங்களில் குறிப்பிடுவதைப் பார்க்கமுடிகிறது.

## பெண்கள்

பெண் ஆடவனின் உடைமை எனக் கூறும் பைபிளில் பெண்ணுக்கு அவமானமும் இழிவும் பயப்பது தவிர வேறு எதுவும் இல்லை என்று இங்கர்சால் குறிப்பிடுகிறார். சமுதாயத்தின் சரிபாதியாக இருக்கும் பெண்கள் உலக நாடுகள் முழுவதும் பெரும்பாலும் அடிமையாகவே நடத்தப்படுகின்றனர். பொன் முட்டையிடும் வாத்தைப் போல இன்பத்தை அளிக்கும் போகப் பொருளாகவே அவள் கருதப்பட்டாள். அறிவுள்ள ஓர் உயிராக அவள் மதிக்கப்படவே இல்லை. அவளுக்கென்று தனி உள்ளமும் விருப்பமும் உண்டு என்பதை ஆடவர் உலகம் ஏற்றுக்கொள்ளவே இல்லை. ஆடவனைச் சார்ந்தே பெண் வாழ்தல் வேண்டும், இயற்கையின் விதி இது என அவளின் அடிப்படை உரிமைகளை முளைக்கவொட்டாமல் தடுத்து வந்தனர். மனிதன் பிறர்மேல் அதிகாரம் செலுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்பவனாக வரலாற்றில் தோற்றமளித்து வருகின்றான். வேறு யார் மீதும் தன்னுடைய செல்வாக்கைச் செலுத்தி ஆட்சிபுரிய முடியாத போதும், ஒருவன் தன் மனைவியின் மீதாவது மேலுரிமை செலுத்தவே விழைகின்றான்.

பெண்களுக்கு வீர உள்ளம் வேண்டும் என்பதை விரும்பும் இவர்,

**“தனித்து வரும்போது - கெட்ட**
**தறுதலை கண்வைத்தால்**
**இனிக்க நலம்கூறு - பெண்ணே**
**இல்லா விடில்தாக்கு?**
**உமியல்ல மாதர் வலக்கை - தீயர்**
**உயிரை இடிக்கும் உலக்கை**
**சேயிழை மார்நெஞ்ச மீது - நாம்**
**சீறுபுலியைக் காணும் போது**
**தீயதோர் நிலைமைஇங் கேது”[11]**

என்ற அடிகளால் அறியமுடிகிறது.

“தமிழச்சியின் கத்தி” யின் காப்பியத் தலைவி சுப்பம்மாவை வீரமிக்க பெண்ணாகப் படைத்துள்ளார். தனியாளாக நின்று தேசிங்கு மன்னனைப் போருக்கு அழைக்கின்ற அஞ்சாமை பெற்றிருக்கிறாள் என்பதை,

**“வெற்பை இடித்துவிடும் - உனது**
**வீரத்தையும் காணும்**
**நிற்க மனமிருந்தால் - நின்றுபார்**
**நெஞ்சைப் பிளக்கும் என்கை”[12]**

என்ற அடிகளால் உணர்த்துகிறார். கற்பினை உயர்வாகக் கருதியதால்தான் கவிஞர் ஏற்கெனவே குறிப்பிட்ட இரண்டு நிகழ்ச்சிகளைப் போல் தம்மைக் காத்துக்கொள்ளும் வலிமையைப் பெண்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றுரைக்கிறார். தன் கற்புக்கு மன்னன் ஆட்சியும் அவன் உயிரும் ஈடாகா என்றுரைக்கிறாள் தமிழச்சி சுப்பம்மா.

மனைவி இறந்தால் கணவன் மறுமணம் செய்து கொள்வதை ஒப்புவதும், கணவன் இறந்தால் மனைவி மறுமணம் புரிவதைத் தடுப்பதுமான சமுதாயத்தில், ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுவேறு நீதி உரைப்பதைக் கண்டு,

**“பெண்ணுக் கொருநீதி கண்டீர்**
**பேதமெனும் மதுவை உண்டீர்**
**கண்ணிலொன்றைப் பழுதுசெய்தால்**
**கான்றுமிழாதோ**
**கான்றுமிழாதோ புவிதான் பழியாதோ”[13]**

எனக் கேட்கிறார். மறுமணம் புரியாத பெண், கெடுவதற்கு வாய்ப்பிருக்கிறது. இதனை மறுப்பவரைப் பிணங்கள் என்றும், மறுமணம் சிறுமை என்பது குறுகிய மதி என்றும் பழிக்கின்றார். எனவே ஆணைப் போலவே “பெண்ணும் துணைவன் இறந்த பின் வேறு துணை தேடச் சொல்லிடுவோம் புவிமேல்” என்று முழங்கி ஆணுக்கும் பெண்ணுக்கும் சமத்துவம் கற்பிக்கின்றார்.

### விடுதலை

பாரதிதாசன் விடுதலை வேண்டிப் பாடும் கவிஞர். நாட்டின் அடிமையை விலக்கி உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்று விடுதலையில் பேரவாக் கொண்டவர். தமிழ்நாட்டின் விடுதலையே அவருக்குத் தலையாயதாகத் தோன்றுகிறது. திராவிடநாடு விடுதலை பற்றியும் பாடியிருக்கிறார்.

ஒருவன் தன்னுடைய தாய்நாட்டின் அடிமைத் தன்மையினை அகற்றி விடுதலை காண்பது உயர்ந்த கடமை. பாரதியார் சொந்த நாட்டில் அயலவர்களுக்கு அடிமைப்பட்டு அஞ்சமாட்டோம் என்று பாடினார். தனக்குரிய தாய்நாட்டிற்கு விடுதலை பெறாதவன் இழிந்தவன் என்ற பொருளில்,

**“தன்நாட்டைத் தான்பெறான் உலகில்**
**எந்நாட்டான் ஆயினும் இழிந்தவன்”[14]**

என்று கவிஞர் பாடுகிறார். உள்ள உயிர் ஒன்றுதான் அதுபோகப் போவதும் ஒரு முறைதான், தாய்நாட்டு விடுதலைக்குப் போவதிலே ஒரு தனிச்சிறப்பு இருக்கிறது என்றார் அறிஞர் அண்ணா. அதுபோல் பாரதிதாசனும் நாட்டு விடுதலையில் நாட்டம் கொண்டு உயிர் இழப்பதே திருநாள் என்று பாடுகிறார்.

**“பொன்னாட்டை மீட்கப் போக்கும்**
**பெருநாட்கள் ஒவ்வொன்றும்**
**திருநாள் ஆகும்.**

**“எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்**
**இனமீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்**
**தினையளவு நலமேனும் கிடைக்கும் மென்றால்**
**செத்தொழியும் நாளெனக்கத்**
**திருநாள் ஆகும்.”**[15]

இவ்வாறு திருநாள் எது என்பதற்குப் பாரதிதாசன் சிறப்பான விளக்கம் தருகிறார். மக்கள் உரிமை கோரி எழுந்த போராட்டத்தில், அடக்குமுறையாளர்களை எதிர்த்துப் புகும் சிறையைத் தென்றல் வரும் சோலையாகக் கருதுகிறார். உரிமைக்காக எழுந்த உணர்ச்சியின் பெருமை இது. கவிஞர் சுரதா தாயகத்தின் விடுதலைக்காகத் தவிட்டைத் தின்பேன், தணலில் நிற்பேன் என உணர்ச்சி மிக்குப் பாடுவதும் இதனை அடியொற்றியது எனலாம்.

### சமத்துவம்

சுதந்திரம் நிலைக்க வேண்டுமென்றால் சமத்துவம் இன்றியமையாதது. சமத்துவம் என்பது பிரஞ்சுப் புரட்சி உலகுக்கு அளித்த மூன்று பண்புகளுள் ஒன்று. பிரஞ்சு ஆட்சியின் கீழ் இருந்த புதுவையில் வாழ்ந்த பாரதிதாசன் அதன் தாக்குரவால் சமத்துவ, சுதந்திர, சகோதரத்தவப் பண்புகளை எய்தினார் எனலாம்.

எல்லோரும் சமம் என்பதே இவர் கொள்கை. சமூகவியலிலே சமத்துவம் வேண்டும் என்பதற்காக முழக்கம் செய்தவர் கவிஞர். இதனைக் கீழ்வரும் அடிகளும் உணர்த்தக் காணலாம்.

**“நலந்தரும் சமத்துவம் நாடுதல் மகத்துவம்**
**நண்ணுவாய் சுதந்திரத்துவம்**
**காலகமேன் சண்டைகளேன்**
**கருத்தெலாம் பேதம் கொள்வதேன்”**[16]

பிறப்பால் கற்பிக்கப்படும் உயர்வுதாழ்வை அறிஞர்கள் நெடுங்காலமாகவே வெறுத்து வந்திருக்கிறார்கள். “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற பூங்குன்றன். “பெரியோரை வியத்தலும் சிறியோரை இகழ்தலும் இல்லை” எனக் குறிக்கும்போது மக்கள் அனைவரும் ஒன்றே என்ற கருத்தைத் தெளிவுபடுத்துகிறார்.

எல்லார்க்கும் எல்லாம் என்று கருதும் இவர். ஒருவன் அழுகைக்குக் காரணமாகச் செய்யப்படும் அநீதிகளை அழிக்க வேண்டும். உலகத்தின் பயன் முழுவதும் உலக மக்கள் பெறுவதில் ஏற்படவேண்டும் என்று பொருள் அடிப்படையிலும் சமத்துவத்தை உணர்ச்சி பொதுவுடைமைப் பண்பு வாய்ந்தது. “உலகம் உன்னுடையதுசுசு எனும் பாட்டில் கவிஞர்,

**“விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை**
**அணைந்துகொள் உன்னைச் சங்கம மாக்கு**
**மானிட சமுத்திரம் நானென்று கூவு**
**பிரிவிலை எங்கும் பேத மில்லை**
**உலகம் உண்ணஉண் உடுத்த உடுப்பாய்”**[17]

என்று குறிப்பிடுவது கவிஞரின் சமத்துவ மனப்பான்மையின் முதிர்ந்த நிலையைக் காட்டுகிறது.

### கல்வி

கல்வி இல்லையேல் அறிவு வளர்ச்சி தோன்ற வழியில்லை. சமயம் சாதி ஆகியவற்றின் பேரால் ஏற்றத் தாழ்வுகளையும் மூடநம்பிக்கைகளையும் ஏழை மக்களிடம் வளர்த்து அவர்களின் எண்ணும் ஆற்றலைத் தூர்த்துச் சமுதாயக் கொடுமை செய்து வந்தனர்.

**“வறியார்க் கெல்லாம் கல்வியின் வாடை**
**வரவிட வில்லைமதக் குருக்களின் மேடை”**[18]

என்ற வரிகளால் சமயம் ஏழை மக்களுக்குக் கல்வியை மறுத்தது என்பதை எடுத்தியம்புகிறது.

### காதல்

காதல் அடைவது உயிர்களின் இயற்கை. அது கட்டுப்பாட்டுக்குள் அடங்கும் தன்மை இல்லாதது. காதல் உரிமை உணர்ச்சியுடையது எனப் பாரதிதாசன் காதலைப் பற்றி விளக்குகிறார்.

**“சாதலும் வாழ்தலும் அற்றஇடம் - அணுச்
சஞ்சல மேனும்இல் லாதஇடம்
மோதலும் மேவலும்இல் லாதஇடம்
மோய்த்தலும் நீங்கலும் அற்ற இடம்”[19]**

என்னும் அடிகள் காதலுக்குரிய அருமையான விளக்கமாக அமைகின்றன. மண்படைப்பே காதல் என்றும் காதல்கணை தொடுக்காத உயிர்க்குலம் எங்கும் இல்லை என்றும் உலகியல் காதல் இல்லாத இடம் சூனியம் என்றும் கவிஞர் குறிப்பிடுகிறார்.

## முடிவுரை

சமுதாயத்தில் அடிப்படை மாற்றமான புரட்சி ஏற்படுவதற்கு எழுத்தாளர் பலரின் எண்ணங்களே காரணமாக இருந்திருக்கின்றன. சமுதாயத்தை ஊடுருவிப் பார்க்கும் தன்னாற்றல் வாய்ந்த கவிஞன், தன்னுடைய பாடல்களில் குறிக்கோளையும் கோட்பாட்டையும் உலவ விடுகிறான் எனக் கூறலாம்.

சமுதாயத்தின் பொது ஒழுக்கத்தைக் குலைப்பது மதத்தின் வேலையாக இருந்து வருகின்றது. இந்து சமயக் கதைகளில் வரும் கடவுளர் எல்லாம் வரைமுறையில்லா ஒழுக்கக் கேடர்களாக விளங்குகின்றனர் என்ற கருத்துடையவர் கவிஞர்.

தமிழுக்கு உரியதல்லாத இச்சாதி முறை ஆரியரால் தமிழகத்திற்கு வருகை புரிந்தது என்பதை, “இடைவந்த சாதி எனும் இடர், அழகிய நாட்டில் அந்நாள் இல்லாத சாதியும், இந்நாட்டில் பிறரால் இறக்குமதி பெற்ற சாதி” நான்கு சாதிகள் ஆரியர் கொள்கையே, பொய்க்கூற்றே சாதி எனல், ஆரியர் சொல் எனப் பல இடங்களில் குறிப்பிடுவதைப் பார்க்கமுடிகிறது.

எல்லார்க்கும் எல்லாம் என்று கருதும் இவர். ஒருவன் அழுகைக்குக் காரணமாகச் செய்யப்படும் அநீதிகளை அழிக்க வேண்டும். உலகத்தின் பயன் முழுவதும் உலக மக்கள் பெறுவதில் ஏற்பட வேண்டும் என்று பொருள் அடிப்படையிலும் சமத்துவத்தை உணர்ச்சி பொதுவுடைமைப் பண்பு வாய்ந்தது.

காதல் அடைவது உயிர்களின் இயற்கை. அது கட்டுப்பாட்டுக்குள் அடங்கும் தன்மை இல்லாதது. காதல் உரிமை உணர்ச்சியுடையது எனப் பாரதிதாசன் காதலைப் பற்றி விளக்குகிறார்.

## குறிப்புகள்

1. பாரதிதாசன் கவிதைகள் (தொகுதி-1), ப.160
2. பாரதிதாசன் கவிதைகள் (தொகுதி-2), ப.133
3. காதலா கடமையா, ப.14
4. பாரதிதாசன் கவிதைகள் (தொகுதி-3), ப.152
5. பாரதிதாசன் பன்மணித்திரள், ப.68
6. மேலது, ப.67
7. குறிஞ்சித்திட்டு, ப.123
8. பாரதிதாசன் பன்மணித்திரள், ப.129
9. மேலது, ப.131
10. பாரதிதாசன் பன்மணித்திரள், ப.68
11. பாரதிதாசன் கவிதைகள் (தொகுதி-3), ப.32
12. மேலது, ப.16
13. பாரதிதாசன் கவிதைகள் (தொகுதி-1), ப.125
14. பாரதிதாசன் கவிதைகள் (தொகுதி-3), ப.157
15. இசையமுது (தொகுதி-1), ப.52
16. சஞ்சீவி பர்வதத்தின் சாரல், ப.43
17. பட்டினப்பாலை, அடி.283-284
18. முல்லைக்காடு, (புதுச்சேரி, 1948), ப.11
19. பாரதிதாசன் கவிதைகள் (தொகுதி-1), ப.6

## துணைநூற் பட்டியல்

1. பாரதிதாசன். 2016. *பாரதிதாசன் கவிதைகள்.* சென்னை, சுவாமிமலை பதிப்பகம், ஐந்தாம் பதிப்பு.
2. பாரதிதாசன், அழகின் சிரிப்பு, செந்தமிழ் நிலையம், சென்னை.
3. ............., 1967. *இசையமுது*, சென்னை, பாரி நிலையம்.

4. ..............., *1965. இருண்ட வீடு,* சென்னை, பாரி நிலையம்.
5. ..............., *1969. எதிர்பாராத முத்தம்,* சென்னை, செந்தமிழ் நிலையம்.
6. ..............., *1962. கண்ணகி புரட்சிக் காப்பியம்,* சென்னை, அன்பு நூலகம்.
7. ..............., *1966. குடும்ப விளக்கு,* சென்னை, பாரி நிலையம்.